பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 07 2025 7 15

திங்கட்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமானதாக அமையும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.
- கன்வர் புனித யாத்திரையை இதுவரை இரண்டரை கோடிக்கும் அதிகமானோர் மேற்கொண்டுள்ளனர்.
- அசாமில் பாலுக்கு லிட்டருக்கு 5 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ரஷ்யா, அமெரிக்காவின் சில பகுதிகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
- ஹங்கேரி சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமானதாக அமையும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவதை உறுதி செய்ய புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சிகள் எழுப்பும் எந்தப் பிரச்சினையையும் அவை விதிமுறைகளுக்கு உட்பட்டு விவாதிக்க அரசு தயாராக இருப்பதாக கூறினார்.

இன்று தொடங்கும் மழைக்காலக் கூட்டத்தொடர், அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

21 அமர்வுகளாக நடைபெறும் இந்தக் கூட்டத்தொடரில், தேசிய விளையாட்டு மசோதா, ஜன் விஷ்வாஸ் திருத்த மசோதா, வணிக கப்பல் மசோதா உள்ளிட்ட 17 முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாடாளுமன்ற விவாதங்கள் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் நடைபெறுவது, நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான பயிற்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்திய ஜனநாயகத்தில் பேச்சுவார்த்தை, விவாதம், ஆக்கப்பூர்வ செயல்பாடு ஆகியவை சிறப்பாக நடைபெற்று வருவதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டிய கடமை ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் இருப்பதால் அவை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் பங்கேற்பது அவசியம் என்றும் அவர் விலயுறுத்தினார்.

அரசியல் என்பது மோதலை மட்டும் கொண்டதல்ல என்றும், தங்களது கொள்கை குறிக்கோளை நிறைவேற்ற மாற்று வழிகளில் முயற்சிக்க வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பீஹாரில் தற்போது நடைபெறுவது போல தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் ஏற்கனவே நடைபெற்றுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் அவர் அளித்த பேட்டியில் நாட்டின் பிற பகுதிகளில் ஏற்கனவே 3 முறை இதுபோன்ற திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அரசியல் சாசன புத்தகத்தை அடிக்கடி எடுத்துக்காட்டும் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி, அரசியல் சாசன அமைப்புகளின் புனிதத்தை அவமதிக்கும் வகையில் விமர்சித்து வருவதாக கூறினார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா, அரசுமுறைப் பயணமாக ஆப்பிரிக்க நாடான லெசோத்தோ சென்றுள்ளார்.

அந்நாட்டின் **Maseru** நகருக்குச் சென்றுள்ள அவர், இன்று லெசோத்தோ வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

மேலும் அந்நாட்டின் தொலைதொடர்பு. அறிவியல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்களையும் திரு. பபித்ரா மார்கரிடா சந்திக்க உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், லெசோத்தோ தலைவர்களுடனான தமது சந்திப்பு இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கன்வர் புனித யாத்திரையை இதுவரை இரண்டரை கோடிக்கும் அதிகமானோர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த யாத்திரையின்போது சிவபெருமானை வழிபடுவதற்காக கங்கை ஆற்றின் புனித நீரை சேகரிப்பதற்காக உத்தராகண்டின் ஹரித்வாரில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர்.

இவர்கள் விரைவாக தரிசனம் செய்து திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உத்தராகண்ட் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே கன்வர் யாத்திரையை சீர்குலைக்க முயலும் சக்திகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் எச்சரித்துள்ளார்.

இந்த யாத்திரை குறித்து சமூக ஊடகங்களில் அவதூறு கருத்துகளை பதிவிடுவோர் அடையாளம் காணப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அசாமில் பாலுக்கு லிட்டருக்கு 5 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பால் விவசாயிகளை சுயசார்படையச் செய்து மாநிலத்தில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டம் மூலம் 601 கூட்டுறவு பால்வள சங்கங்களை சேர்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு நாளைக்கு 30 லிட்டர் பால் வரை ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பால் பதப்படுத்தும் திறனை மேம்படுத்தி பால் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் அதிக அளவில் சேர்வதை ஊக்குவிக்க வேண்டும் என்றும் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

ரஷ்யாவின் **Kamchatka** தீபகற்ப பகுதியில் நேற்று ஐந்து முறை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவில் 7 புள்ளி நான்காக பதிவாகியுள்ளது.

எனினும் சுனாமி அச்சுறுத்தல் ஏதுமில்லை என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அமெரிக்காவின் அலாஸ்கா தீபகற்ப பகுதியிலும் இன்று காலை 6 புள்ளி 2 ரிக்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடற்கரைப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஆந்திராவில் நடைபெற்ற மதுபான முறைகேட்டில் ஒ.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. ஜெகன் மோகன் ரெட்டி ஆதாயம் அடைந்திருப்பதாக சிறப்பு புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

இந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்திய சிறப்பு புலனாய்வுக் குழு 305 பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

அதில் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடைபெற்றிருப்பதாகவும், ஊழல் பணத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. ஜெகன் மோகன் ரெட்டி பலனடைந்திருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் 28 நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்குத் தொடர்பிருப்பதாகவும் குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியாவில் செயல்பட்டு வரும் தங்களது கிளை நிறுவனமான நயாரா எனர்ஜி நிறுவனத்திற்கு ஐரோப்பிய யூனியன் தடை விதித்திருப்பது நியாயமற்றது என்று ரஷ்யாவின் ராஸ் நெஃப்ட் எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளது.

யுக்ரைனுக்கு எதிராக போர் நடத்தி வரும் ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கடந்த வெள்ளியன்று கடுமையான பொருளாதார தடைகளை அறிவித்தன.

ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த தடை பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்யும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ள நிலையில், ராஸ் நெஃப்ட் நிறுவனத்தின் இந்திய பிரிவான நயாரா நிறுவனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடை இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்கள் தட்டுப்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதால் இதனைத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கேரளா, மாஹே, கடலோர கர்நாடகாவில் அடுத்து வரும் 5 நாட்களுக்கு அதிகனமழை பெய்யும் என்று தெரிவித்துள்ள வானிலை மையம், ஹிமாச்சலப்பிரதேசம், தெலங்கானாவிலும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறியுள்ளது.

உத்தரப்பிரதேசம், நாகாலாந்து, திரிபுரா, அருணாச்சலப்பிரதேசத்திலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலும் நாளை வரை கன முதல் மிக கனமழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் கிஷ்துவார் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

இம்மாவட்டத்திற்கு உட்பட்ட கான்கு வனப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையின்போது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதையடுத்து பாதுகாப்பு படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தி வருவதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அந்த யூனியன்பிரதேசத்தின் பாதுகாப்பு நிலவரம் குறித்து துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

<<<<>>>>

ஹங்கேரி சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

புடாபெஸ்டில் நடைபெற்ற இப்போட்டியின் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் சுமித் வெள்ளிப் பதக்கத்தையும், 55 கிலோ எடைப்பிரிவில் அனில் மோர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி அரையிறுதிக்கு முன்னேறி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதியில் அவர், சீனாவின் **Yukxin Song-**ஐ வென்றார்.

<<<<>>>>

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி இன்று எகிப்தின் கெய்ரோவில் தொடங்குகிறது.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் 234 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் அனஹத் சிங், அனிகா துபே, அரிஹந்த் கரண் யாதவ் உள்பட 12 பேர் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>